செய்தி வெளியீடு எண் : 1532 நாள் : 01.08.2023

# பத்திர பதிவுத்துறையில் வசூல் சாதனை

தமிழ்நாடு பத்திர பதிவுத்துறையில் அறிமுகப்படுத்தப்பட்டு வரும் பல்வேறு சீர்திருத்தங்களின் விளைவாக இத்துறையின் மூலம் அரசுக்கு வரும் வருமானம் தொடர்ந்து உயர்ந்து வருகிறது. பதிவுக்கு வரும் பொதுமக்களுக்கான பதிவு வசதிகளை மேம்படுத்துதல், போலி பத்திர பதிவுகளைத் தடுக்கும் பல்வேறு முறைகளை அறிமுகப்படுத்தி பதிவு பொதுமக்களுக்கு துறையின் மீது நம்பிக்கை ஏற்படுத்துதல் மற்றும் வருமான சிதறல்களை ஒழுங்குபடுத்தி அரசின் கருவூலத்திற்கு வர வேண்டிய இனங்களை விடுதல் இன்றி வர வைத்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளின் விளைவாக பத்திர பதிவுத்துறை வருவாய் வசூலில் தொடர்ந்து முன்னேற்றம் கண்டு வருகிறது. கடந்த நிதி ஆண்டில் இதுவரை இல்லாத அளவில் 17,253 கோடி ரூபாய் வசூல் செய்யப்பட்டு சாதனை படைக்கப்பட்டது. கடந்த ஆண்டில் ஜூலை மாத முடிவு வரை வசூலிக்கப்பட்ட மொத்த வருவாயைவிட நடப்பு ஆண்டின் ஜூலை மாத முடிவில் அதிக வருவாய் வசூலிக்கப்பட்டு பதிவுத்துறை நடப்பு நிதியாண்டிலும் சாதனை படைத்துள்ளது. கடந்த நிதி ஆண்டில் 31.07.2022 வரை வசூலிக்கப்பட்ட மொத்த வருவாய் ரூபாய் 5539.06 கோடி ஆகும். நடப்பு ஆண்டில் நேற்று வரை அதாவது 31.07.2023 வரை பத்திர பதிவுத்துறையில் வசூலிக்கப்பட்ட மொத்த வருவாய் ரூபாய் 5611.47 கோடி ரூபாய் ஆகும். இவ்வகையில் வரலாற்று சாதனை படைக்கப்பட்டதாக கருதப்பட்ட கடந்த ஆண்டு சாதனையைவிட நடப்பு ஆண்டில் நடப்பு மாதத்தில் பத்திர பதிவுத்துறை அதிக வருவாய் ஈட்டி கடந்த ஆண்டு சாதனையைக் கடந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

அரசு செயலாளர்,

வணிகவரி மற்றும் பதிவுத்துறை

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in